வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 47/அ2/2022 நாள் 07.01.2022

பொருள் மெட்ரிக் பள்ளிகள் – வேலூர் மாவட்டம் – அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிடிலப் பள்ளிகளிலும் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (போக்சோ ) சட்டம் 2012 இன் படி,பள்ளி வகுப்பறையில் 1098 சிறார் உதவி எண் குறித்த விவரங்கள் கண்டிப்பாக ஒட்டப்பட நடவடிக்கை மேற்கொள்ளுதல் - தொடர்பாக

பார்வை

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்ட நாள் 27.12.2021
2. தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 0022/அ1/2022-1 நாள் 04.01.2022

பார்வை 1ல் காணும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் நாள் 27.12.2021 பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (போக்சோ ) சட்டம் 2012 இன் செயல்பாடுகள் குறித்து கூட்டம் நடைபெற்றதாக பார்வை 2ல் காணும் கடிதத்தின் படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை 1 மற்றும் 2ல் காணும் கடித ஆணைக்கிணங்க வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளிலும் ஒவ்வொரு வகுப்பறைகளிலும் 1098 சிறார் உதவி எண் குறித்த விவரங்களை கண்டிப்பாக ஒட்டப்பட வேண்டும் எனவும், உயர் அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்ளும் போது மேற்காண் தகவல் குறித்து எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணமும், அவ்வபோது 1098 சிறார் எண் எவ்வித சேதாரமிமன்றி ஒட்டப்பட்டுள்ளதா என உறுதி செய்து கொள்ள அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர்கள் / தாளாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் தங்கள் பள்ளியில் பயிலும் மாற்றுத் திறன் கொண்ட மாணாக்கர் மற்றும் பார்வையற்ற மாணக்கர் எவரேனும் இருந்தால் சார்ந்த பள்ளி முதல்வர்கள்/ பள்ளி ஆசிரியர் மூலமாக அம்மாணவர்களுக்கு சிறார் உதவி எண் தொடர்பான விவரங்களை அவர்களுக்கும் புரியும் படி எடுத்துரைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மீள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஒப்பம் )

க.முனுசாமி

முதன்மைக்கல்வி அலுவலர்

வேலூர்

**பெறுநர்**

தாளாளர்கள்/ முதல்வர்கள்

அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி.

**நகல்** வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.